Register Number

## பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

(உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம்,

படைப்பாற்றல், மொழித்திறன்)

## Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

*குறிப்பு :* விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினவாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை எழுதுக : $3 \times 4 = 12$

1. செந்தமிழ் நாடு, கொடுந்தமிழ் நாடு என்ற பிரிவுகள் பற்றிப் பரிதிமாற் கலைஞர் உரைப்பன யாவை ?
2. சமரசத்தை நடைமுறையில் கொண்டுவர மனிதன் செய்ய வேண்டுவனவாகத் திரு. வி. க. உரைப்பன யாவை ?
3. மொழியைக் கொண்டு சமரசத்துக்கு கேடு சூழ்பவர்களைப் பற்றித் திரு. வி. க. வழிநின்று ஆய்க.
4. கீட்ஸ், ஜான்ரஸ்கின், பவணந்தி முனிவர் ஆகியோர் கூறும் கவிதையின் இயல்புகள் யாவை ?
5. நம் முன்னோர்கள் நனி நாகரிகராய் விளங்கிய பான்மையை விளக்குக.

[ Turn over

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை தருக : $3 \times 4 = 12$

6. 'ஆ' தெய்வத்தன்மையுடையது என்பதனை எடுத்துக்காட்டுக.

7. 'இரந்தும் உயிர் வாழ்தல்' என்று தொடங்கும் குறட்பாவில் பொதிந்துள்ள இலக்கிய நயங்களை விளக்குக.

8. 'தேர்தலும் ஒரு தடுமாற்றமே' என்று மு. வ. உரைப்பனவற்றை விளக்குக.

9. ஒரு படி முன்னேற்றம் என்று மு. வ. உரைப்பது யாது ?

10. தமிழர்கள் பழங்காலந்தொட்டே பல கலைகளையும் பேணி வந்துள்ளனர் என்பதை விளக்குக.

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் இருபது வரிகளின் மிகாது விடை எழுதுக : $1 \times 6 = 6$

11. தமிழ் - உயர்தனிச்செம்மொழி — இத்தலைப்பின் கீழ்ப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக.

12. வயிற்றுப் பெருமான் பொருட்டு மக்கள் செய்யும் செயல்களாக அறநெறிச்சாரம் கூறுவன யாவை ?

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக : $2 \times 10 = 20$

13. *'மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து'* அல்லது *'சட்டை'* என்னும் சிறுகதையைக் கருப்பொருளும், சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

***அல்லது***

*'பால்வண்ணம் பிள்ளை'* அல்லது *'மகன்'* என்னும் கதையில் இடம்பெறும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. *'மண்'* அல்லது *'ஒவ்வொருகல்லாய்'* என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

***அல்லது***

கோமதி தன் மருமகளை வேறுபாடு கருதாமல், அன்பு பாராட்டி ஏற்றுக் கொண்டதாகக் கற்பனையாக ஒரு கதை எழுதுக.

***அல்லது***

புதல்வனால் கைவிடப்பட்ட முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள தந்தையொருவரின் மனப்போராட்டங்களைச் சித்தரிக்கும் வகையில் நும் சொந்த நடையில் ஒரு கதை எழுதுக.

V. 15. பின்வரும் செய்யுள்களைப் படித்துணர்ந்து, அவற்றில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. $1 \times 10 = 10$

அ) பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளிப்
பிறமொழிக்குச் சிறப்பளித்த பிழையை நீக்க
உற்றெடுத்த அன்புரையால் உலுங்க வைத்திவ்
வுலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ ?
கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்துவிட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்.

ஆ) கண்ணிரண்டில் ஒருகண்ணைக் காத்தாற் போலும்
கைகால்கள் இரண்டிலொன்றைக் கழித்தாற் போலும்
பெண்ணினத்தை ஆணினத்திற் குறைந்த தாகப்
பேசிவந்த நீசக்குணம் பெரிதும் நீங்கப்
பண்ணிசைக்கும் மிகப்புதுமைக் கவிகள் பாடிப்
பாவையரைச் சரிநிகராய்ப் பாராட்டும் நல்
வண்ணமதை நம்மனத்தில் இருக்கச் செய்த
ஏற்றத்தால் பாரதிஓர் ஆசான் என்பேன்.

- நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை.

*குறிப்பு :* காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட VI மற்றும் VII வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

VI. பின்வரும் தொடர்களில் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக. $3 \times 2 = 6$

16. **Birds of the same feather flock together.**

17. **Every tide has its ebb.**

18. **Experience will make a person efficient.**

19. **Money makes many things.**

20. **Many thanks for your kind message of greetings.**

21. **Too much of anything is good for nothing.**

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில், வாழ்க்கை நிகழ்வில் அமைத்து ( பத்து வரிகளில் ) எழுதுக. $1 \times 4 = 4$

அ) ''உள்ளங்கை நெல்லிக்கனி போல''

ஆ) ''இலவு காத்த கிளி போல''

இ) ''கூடி வாழ்ந்தால் கோடி நன்மை''

***அல்லது***

'தென்றல்' *அல்லது* 'அறிவியலின் ஆற்றல்' என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை ( பத்து வரிகளுக்குள் ) எழுதுக.

**[ Turn over**

*குறிப்பு :* காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா

VI மற்றும் VII-ல் உள்ள வினாக்களுக்கு பதிலாக பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதவும். $5 \times 2 = 10$

ஆற்றொழுக்கம் என்னும் சொற்றொடர் வழக்கில் உள்ளது. அதன் பொருள் ஆறு ஒழுகும் முறை அல்லது ஆற்றின் ஒழுக்கம் என்பதாகும். ஓடும் ஆற்றினைப் பல்வேறு காலங்களில் பார்த்தவர்கள் இதில் அடங்கியுள்ள உண்மையை எளிதாகப் புரிந்து கொள்ளலாம். மலை உச்சியில் மழைபெய்து ஆற்றில் புதுநீர் வரும்பொழுது அது கலங்கி இருக்கும். வேகம் உடையதாகவும் இருக்கும். தொடர்ந்து மழை பெய்யுமாயின், ஆற்றின் வெள்ளம் பெருகி வழியிலே கிடப்பவை அனைத்தையும் அடித்துக் கொண்டுவரும். கரைகளைக் கடந்து இருமருங்கிலும் வாழும் உயிர்களுக்குப் பல்வேறு வகைக் கேடுகளையும் விளைவிக்கும். ஆனால் இந்த வெள்ளம் தொடர்ந்து, பிறகு வெள்ளம் வடிகிறது. ஆற்றின் கரைக்குள் அடங்கி ஒடுகிறது. அதாவது மேடு பள்ளமே இல்லாமல், சிறிய அலைகளும் இல்லாமல், மிகுந்த வேகமும் இல்லாமல் தன் ஓட்டத்தைத் தொடர்கிறது.

*வினாக்கள் :*

16. ஆற்றொழுக்கு - இதன் பொருள் யாது ?

17. புதுநீர் எப்படி இருக்கும் ?

18. ஆற்று வெள்ளம் என்பது எவ்வெவற்றை அடித்து வரும் ?

19. வெள்ளம் தொடர்ந்து வருமா ?

20. ஆற்றுநீர் இயல்பைக் கூறு.

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக:

$10 \times 1 = 10$

23. சென்னைக்கு அருகாமையில் இருப்பது கன்னியாகுமரி அல்ல.

( வாக்கியப் பிழையைத் திருத்துக )

24. இப்படி சொன்னால் எப்படி புரியுமென தெரியவில்லை.

( தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக )

25. வைக்கோலைத் தேடிவந்தக் காளை ஓடியது.

( தேவையற்ற இடங்களில் அமைந்த வல்லின மெய்களை நீக்கி எழுதுக )

26. ஸ்கூல் ஃபர்ஸ்ட் பெல் அடிச்சாச்சி. நான் லேட்டா போறேன்.

( ஆங்கிலச் சொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக)

27. கரும்புத் தோப்புக்கு அருகாமையில் நாய் கத்தியது.

( மரபு வழுக்களை நீக்கி எழுதுக )

28. பரவை இறையாகப் பயரு வகைகளைத் திண்ணும்.

( எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக)

29. உலை - உளை *அல்லது* உரவு - உறவு

( பொருள் வேறுபாட்டை அறியும் வகையில் தனித் தனி வாக்கியங்களில் அமைத்தெழுதுக )

[ Turn over

30. அப்பிசி மாசம் அடமள இம்பாங்க

( கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக )

31. ஸ்லிம்மாக இருப்பதே பியூட்டி என்ற எண்ணம் பரவி வருகிறது.

( ஆங்கிலச் சொற்களை நீக்கி நல்ல தமிழில் எழுதுக)

32. சமரசம் வாழ்வில் நுழைந்து ஆட்சிபுரியின் உலகில் போர் ஏது பூசல் ஏது புரட்சி ஏது

( பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக).